**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**CC.No.77/2019**

**Prosecution Witness : 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கீதாதேவி | **Caste** | : | |
| **Husband's Name** | : | கார்த்திகேயன் | **Calling** | : | காவல் ஆய்வாளர் |
| **Village** | : | வீரசோழன், | **Religion** | : | |
| **Taluk** | : | விருதுநகர் | **Age** | : | **50/2025** |
| | | | **Dated** | : | **17.03.2026** |

**17.03.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 10 **திருமதி.கீதாதேவி**. பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 9** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1முதல் 3 எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது விருதுநகர் மாவட்டம், வீரசோழன் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.கடந்த 28.10.2017ம் தேதி திண்டுக்கல் இருப்பு பாதை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது நிலைய குற்ற எண்.120/2017, சட்டபிரிவுகள் 147,353,323,294(பி),506(1) இதச வழக்கினை என் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுதாகர், டக்லஸ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **மாதிரி வரைபடம்**

**அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் ஆனந்த் பாபு, தனபாலன், சந்திரன் ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.10.2017ம் தேதி திண்டுக்கல் வத்தலக்குண்டு மெயின்ரோடு கருப்பன சாமி கோவில் அருகே சுமார் காலை 4.30 மணியளவில் TN 57 B 9393 டாடா சுமோ வாகனத்தில் வந்து இறங்கி நின்று கொண்டிருந்த எதிரிகளை தகவலாளி அடையாளம் காட்ட காரணம் கூறி கைது செய்து மூன்று எதிரிகளிடமும் தனிதனியே ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஜெயமுருகன், பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன்.

ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஜெயசீலன் என்பவரிடமிருந்து TN 57 B 9393 டாடா சுமோ வாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து பாரா வசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் கனம் நீதித்துறை நடுவர் எண்-2 அவர்களிடம் ஒப்படைத்து ஆர்பிஆர் எண்.215/2017 என்று பதிவு செய்தேன். வழக்கின் சம்பந்தப்பட்ட எதிரிகளில் பெயர், விலாசம் தெரியாத மற்றும் பலர் என்பதிலிருந்து மூன்று எதிரிகளை மட்டும் வழக்கின் எதிரிகளாக சேர்த்து மற்ற எதிரிகளை வழக்கிலிருந்து விடுவித்து மற்றும் வழக்கின் சட்டபிரிவான 147,353,323,294(பி),506(1) இதசவிலிருந்து 353,323,294(பி),506(1) இதசவாக அறிக்கை சமர்பித்தேன். வழக்கின் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுரேஷ் பாபு என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

வாதிக்கு ஏற்பட்ட காயம் குறித்து வாதி தன்னிச்சையாக மருத்துவமனையில் இருந்து வெளியேறியதால் காயம் குறித்து கருத்துரை வழங்க இயலாது என தெரிவித்தார். பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் பாஸ்கரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு என் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 353,323,294(பி),506(1) இதசவாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **அத்தாட்சி அ.சா.ஆ.7, படிவம் 91 அ.சா.ஆ.8, சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9, விபத்து பதிவேடு அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகாரில் சுமார் 15 நபர்கள் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 7 நபர்கள் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் எதிரிகளின் எண்ணிக்கை குறித்து மூன்று விதமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் சுதாகர் மற்றும் டக்லஸ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் தங்களது வாக்குமூலத்தில் காவல் ஆய்வாளர் 24.00 மணிக்கு விசாரணைக்காக சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றார்கள் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் சாட்சிகள் சுதாகர் மற்றும் டக்லஸ் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் 23.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு நான் சென்றதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் 29.10.2017 அன்று பார்வை மகசர் தயார் செய்யப்பட்டதாக குறிப்பிட்டு நான் கையொப்பம் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். நான் இவ்வழக்கின் சாட்சிகளை எந்தெந்த தேதிகளில் விசாரித்து வாக்குமூலம் பெற்றேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

நான் அ.சா.1 இடம் மறு வாக்குமூலம் பெற்றதற்கு தேதி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். மேற்படி வாக்குமூலத்தில் அ.சா.1 எதிரிகளின் பெயர் மற்றும் விலாசத்தை யாரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் புகாரில் ஏழு நபர்கள் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். எனது விசாரணையில் சாட்சிகள் யாரும் எதிரிகளின் அடையாளம் குறித்து கூறவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் சாட்சிகள் யாரும் எந்தெந்த பொருட்களை எதிரிகள் சேதப்படுத்தியதாகவோ, எடுத்து சென்றதாகவோ கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 இடமிருந்து இரத்தம்பட்ட ஆடைகள் எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடம் அருகில் வீடுகள் உள்ளது என்றால் சம்பவ நேரத்தின் போது வீடுகள் இல்லை. சம்பவ இடத்திற்கு கிழக்கு பக்கமாக டாஸ்மாக் உள்ளது என்றால் தூரமாக உள்ளது. ரயில்வே கேட் எவ்வளவு நேரமாக செயல்படாமல் இருந்தது என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.10 ஆன விபத்து பதிவேட்டில் 15 தெரியாத நபர்கள் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.10 ஆன விபத்து பதிவேட்டில் சான்றொப்பமிட்ட மருத்துவர் விஜய்சந்தர் என்றால் சரிதான். இவ்வழக்கில் சுரேஷ் பாபு என்ற மருத்துவர் அ.சா.1க்கு சிகிச்சை அளித்ததாக எந்தவொரு ஆவணத்திலும் குறிப்பிடவில்லை என்றால் 161(3) வாக்குமூலம் பெற்றோம்.

டாடா சுமோ TN 57 B 9393 என்ற வாகனத்தை தவிர வேறு எந்த வாகனமும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனம் ஜெயசீலன் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனம் மூன்று எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கைது குறிப்பாணையில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். டாடா சுமோ TN 57 B 9393 என்ற வாகனம் யாருக்கு சொந்தமானது என்று விசாரித்து அதன் உரிமையாளரை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனம் ஆஜர் எதிரிகளுக்கு சொந்தமானது இல்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்தவொரு நிகழ்வும் நடைபெறவில்லை என்றாலும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரிகளை சொன்ன நாள் மற்றும் நேரத்தில் கைது செய்யவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அதன் அடிப்படையில் எந்தவொரு சா ன்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் , இந்த வழக்கிற்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.17 14:09:18 +0530

Judicial Magistrate No.II
Dindigul.